பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 115

வெள்ளிக்கிழமை
21 மார்ச் 2025

பங்குனி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பொலிஸ் பேச்சாளர் பதவிவிலகல்

கொழும்பு, மார்ச் 21
பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க நேற்று மாலை தனது பதவியைத் துறந்துள்ளார்.
(அ-ம-இ)

# உள்ளூராட்சித் தேர்தல்

## மே6!

கொழும்பு, மார்ச் 21
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாநகரசபைகள் உட்பட 336 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய தேர்தல் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. 15

யாழ்ப்பாணம் மாநகரசபையில்

## மான், சங்கு உள்ளிட்ட 5 வேட்புமனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் மாநகரசபையில் போட்டியிடுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களில் ஐந்து வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
மாநகரசபையின் முன்னாள் முதல்வர் மணி 14

வவுனியாவில்

## 103 உறுப்பினர்களின் தெரிவுக்காக 1,231 வேட்பாளர்கள் களத்தில்!

வவுனியா, மார்ச் 21
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஆயிரத்து 231 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களை தாக்கல்செய்துள்ளனர் என்று வவுனியா 15

## மன்னார் மாவட்டத்தில் 8 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

மன்னார், மார்ச் 21
மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 38 வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்டிருந்த நிலையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகள் உள்ளடங்கலாக 8 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான க. கனகேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:- 15

## ஏழு வேட்புமனுக்கள் கிளிநொச்சியில் 'அவுட்'!

கிளிநொச்சி, மார்ச் 21
கிளிநொச்சி மாவட்டத்தில் 7 தரப்புகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் வேலாயுதம் சிவராஜன் தெரிவித்தார். 15

தொழில்நுட்பக் கோளாறால்

## தாமதித்து ஏற்கப்பட்டது சங்குக் கூட்டணியின் மனு

15

## நான்கு வேட்புமனுக்கள் முல்லையில் நிராகரிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 21
முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 4 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 11 கட்சிகளும் 7 சுயேச்சைக் 15

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 35 வேட்புமனுக்கள் 'அவுட்'

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் 35 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பிரதீபன் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தில் அனைத்து உள்ளூராட்சிச் சபைகளுக்குமாக 159 தரப்புகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. இவற்றில் அரசியற் கட்சிகள் சார்பில் 136 வேட்புமனுக் 14

## முன்னணியின் வேட்புமனு 2 இடங்களில் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணியின் வேட்புமனுக்கள் இரண்டு 14

சிவமோகனின் உறுப்புரிமை

## கட்டாணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது நேற்று

யாழ்ப்பாணம், மார்ச் 21
தம்மைக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக கட்டாணை 15




## சங்குக் கூட்டணியின் 9 வேட்புமனுகள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக சங்குக் கூட்டணியினர் (ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி) சமர்ப்பித்த 9 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 15



## நிராகரிப்புக்கு எதிராக உடன் சட்டநடவடிக்கை

சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் 14

## தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் ஏற்றச் சதியா?

சங்குக் கூட்டணி கேள்வி 14

'அப்ப கனபேரின்ர கனவில மண் விழுந்து போட்டுது கண்டியளோ'

மிருசுவில் படுகொலையாளி

## சுனில் ரத்நாயக்கவுக்கு பயணத்தடை



கொழும்பு, மார்ச் 21
யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டுத் தமிழர்களைப் படுகொலைசெய்த குற்றவாளியான சுனில் ரத்நாயக்கவுக்கு 15

## பட்ஜெட் மீது இன்று இறுதி வாக்கெடுப்பு!

கொழும்பு, மார்ச் 21
2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.
நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4023 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 23 51 54 63 |
| விசேட எழுத்து | I |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1090 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 22 29 54 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 049 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 3 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2129 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 21 39 58 64 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5781 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 5 8 7 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1811 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 12 49 76 78 |
| விசேட எழுத்து | Q |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 20.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0356 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 7 9 |

# சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசியப் பேரவை

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நான்கு தரப்புகளுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் சைக்கிள் சின்னத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளுக் கான வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது

இந்த முயற்சி ஒரு கொள்கை யின் அடிப்படையில் எங்கள் மட்டத்திலே ஏற்பட்ட ஒரு இணக் கப்பாட்டால் முன்னெடுக்கப்படும் முயற்சியாகும். தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்தவேண் டிய தேவை எமக்கு இருக்கின் றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் சிவா ஜிலிங்கம் உட்பட சிலரும், அருந்தவபாலனும் கொள்கை ளவில் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வந்துள்ளனர். தமிழ்த் தேசிய பசுமை இயக்க மும் எம்முடன் சேர்ந்து பயணிக் கவுள்ளது. ஜனநாயகத் தமிழர சுக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் எம்முடன் ஒன்றாகப் பயணிக்க முடிவெடுத்துள்ளனர். எதிர்காலத்தில் இந்த முயற்சி பலமடையும் என்ற நம்பிக்கை யில் நாம் செயற்படுகின்றோம். எம்முடன் இணைந்துள்ளவர் கள் வெறுமனே தேர்தல் அரசி யலை நோக்காகக் கொண்டவர் கள் அல்லர். மாறாகக் கொள் கையை நேசிப்பவர்கள் - என் றார். (எ-125)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 20.03.2025 | வியாழக்கிழமை | 0489 |
| DLB | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| | Q | 3 6 1 4 4 8 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.03.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2755 | U | 05 15 25 52 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.03.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 08 43 57 77 | 4916 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 20.03.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0646 | 28 30 43 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.03.2025 | வியாழக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♎ | 31 35 51 59 | 4467 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 20.03.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 27 | 13 20 21 49 | 1931 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.03.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 09 22 47 56 | 2581 |



# களனிப் பல்கலை விரிவுரையாளர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கண்டி, மார்ச் 21

களனிப் பல்கலைக்கழகத் தின் தத்துவத் துறையின் உளவியல் பிரிவின் பிரதானி, சிரேஸ்ட விரிவுரையாளர் கலா நிதி என்.டி.ஜி. கயந்த குணேந் திர நேற்றுமுன்தினம் விபத் தில் சிக்கி உயிரிழந்துள்ளார். அவர் தனது மூன்று பிள்ளை கள் மற்றும் மனைவியுடன் யாழ்ப்பாணம் நயினாதீவுக் குச் சுற்றுப்பயணம் மேற் கொண்டு ஹைஏஸில் திரும் பிக்கொண்டிருந்தபோது, மத்திய அதிவேக நெடுஞ்சா லையில் லொறியொன்றுடன் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த அவ ரது மூன்று பிள்ளைகள், மனைவி மற்றும் இரண்டு பேர் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ச-25-சி)

# சதிவலைகளை அறுத்தெறியவே புதிய கூட்டணியில் கைகோர்ப்பு

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ் இனம் மீது இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ள சதிவலையை அறுத்தெறியவே புதிய கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதன்மை வேட்பாளர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யைச் சேர்ந்த தீபன் திலீசன் போட்டிடுவார் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாய கத்தமிழ்த்தேசியக்கூட்டணியில் இருந்து வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து உள்ளூராட்சித் தேர் தலில் போட்டியிடவுள்ளோம். இந்தக் கூட்டணியில் தொடர்ந்து பயணிக்கவுள்ளோம்.

உள்ளூராட்சிசபைகளைத் தெற்குக் கட்சியான தேசிய மக் கள் சக்தி கைப்பற்றுவதைத் தடுப்பதற்காகவே நாம் அனை வரும் கைகோர்த்துள்ளோம். தமிழ் இனம் மீது இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ள சதிவலையை அறுத்தெறிய தமிழ்மக்கள் அனைவரும் முன்வர வேண் டும். அதற்காக என் சார்ந்த கூட்டணி பலமாகச் செயற்படும் என்றார். (எ-125)



# காடுமேடெல்லாம் திரிந்து வேட்பாளர்களை இம்முறை தெரிவுசெய்யும் நிலையில்லை

## தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

உள்ளூராட்சிசபைகளில் தனித்து ஆட்சி யமைக்க முயற்சிக்கின்றோம். ஆனால் தற்போதுள்ள தேர்தல் முறைமையில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சியமைப்பது கடினம். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை நிய மிப்பதில் நிலவிய தட்டுப்பாடு காரணமா கவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளது. -இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைகளுக்கான வேட்பும னுத் தாக்கலின் பின்னர் யாழ்ப்பாணத் தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

காடு மேடெல்லாம் திரிந்து இம்முறை வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண் டிய அவசியம் எமக்கு இப்போது இருக்க வில்லை. ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு பிரதேசசபைகளுக்கான தேர்த லில் வேட்பாளர்களை நாங்கள் நியமித்திருந்த காரணத்தினால் எங்களு டைய கட்சியினுடைய தீர்மானத்தின்படி அப்போதைய வேட்பாளர்களுக்கு நாங் கள் முன்னுரிமை கொடுத்திருந்தோம். கட்சியின் தீர்மானத்தின்படி எந்தச் சபைக் கும் முதல்வரோ, தவிசாளரோ இப்போது அறிவிக்கப்படமாட்டார்கள். தேர்தலுக்குப் பின்னரே இது தொடர்பில் கட்சி முடிவெ டுக்கும்- என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனப்படுகொலையையும் நாடாளுமன்றில் விவாதியுங்கள்!

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 21**

**பட்டலந்த என்ற சொல்லின் ஊடாக தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைக்கவேண்டாம். தமிழ் மக்கள்மீது 1956ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு இறுதிப்போர் வரையில் நடந்த இனப்படுகொலை தொடர்பாகவும் விவாதம் நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- நாங்கள் பாதிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட ஓர் இனம். உணவுகூட அனுப்பாமல் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 4 இலட்சத்து 20ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறுதி யுத்தம் நடைபெறும்போது முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவுப் பகுதியில் இருந்தனர். ஆனால் 70 ஆயிரம் பேருக்கே அப்போதைய அரசாங்கம் உணவு அனுப்பியது. எத்தனைபேர் பட்டினியால் கொல்லப்பட்டிருப்பார்கள்? மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால் இங்கு நடைபெற்றது இனப்படுகொலை இல்லை என நீங்கள் வாதிடுகின்றீர்கள். ஆனால்பட்டலந்தபடுகொலை தொடர்பில் பேசுவதற்குத் தயாராகின்றீர்கள். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, அவர்களுக்கு நீதி வேண்டும். ஆனால் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிடவேண்டாம். இறுதிப்போர் நடைபெற்றபோது பல நாடுகளின் செய்மதிகள் இங்கு நடந்த படுகொலைகளை மிகத் துல்லியமாகப் படம்பிடித்து வைத்துள்ளன. அவற்றின்படி சரியான நீதி, விசாரணை வேண்டும்-என்றார். (எ-இ)

## சட்டவிரோத மணலுடன் டிப்பர் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் சாவகச்சேரிப் பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் வழிமறித்தபோது சாரதி வாகனத்தை நிறுத்தாது சென்றுள்ளார். அதையடுத்துப் பொலிஸார் வீதித்தடையை ஏற்படுத்தி டிப்பர் வாகனத்தின் சக்கரத்தில் காற்றிழக்கச் செய்து அதைக் கைப்பற்றியுள்ளனர். ஆயினும் சாரதி டிப்பர் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் சாவகச்சேரி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-27)

### யாழில் மாயமான மீனவர்கள்

## ஐந்து நாள்களின் பின் இராமேஸ்வரத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்றவேளை காணாமற்போன மீனவர்கள் ஐந்து நாள்களின் பின்னர் தமிழகக் கடலோரப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் தொண்டி மீன்பிடித்துறைமுகத்துக்குச் சற்றுத் தொலைவில் படகில் தத்தளித்துக்கொண்டிருந்த நிலையில் அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரையும் கைதுசெய்துள்ள தமிழகப் பொலிஸார், இவர்கள் கடத்தல் நோக்கத்துடன் தமிழகக் கடற்பரப்பினுள் நுழைந்தார்களா? எனும் சந்தேகத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ-100)



## குப்பைமேடாக கிளிநொச்சி நீதிமன்று வீதி

கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு அருகாமையிலுள்ள வீதி பயன்படுத்தமுடியாதவாறு சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கரைச்சிப் பிரதேசசபைக்குட்பட்ட குறித்த வீதியை நீதிமன்றத்துக்கு வருகைதரும் பலர் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். வீதியில் அதிகளவான பிளாஸ்டிக் பொருள்கள், ஏனைய கழிவுகள் என்பன அதிகளவில் கொட்டப்பட்டு குவிந்துள்ளன. எனவே இதுகுறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-25, 27)

## ரூபவாஹினியால் அரசுக்குச் சிக்கல்

கொழும்பு, மார்ச் 21

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை பராமரிப்பது மிகவும் கடினமான பணியாக மாறியுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். சில தொலைக்காட்சி நாடகங்களுக்கு பணம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வற்வரி தொடர்பில் சிக்கல்கள் காணப்பட்ட நிலையில் தற்போது அவை செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## இந்திய வாகன உற்பத்தியாளர்கள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, மார்ச். 21

இந்திய வாகன உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர். சகல விதமான வாகனங்கள், பயணிகள் வாகனங்கள், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த குழுவில் அடங்கியுள்ளனர். இவர்கள் அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி, பிரதியமைச்சர் சதுர அபயசிங்க, இலங்கை முதலீட்டுச் சபை பிரதிநிதிகள், இலங்கை வாகன விற்பனையாளர் சங்க பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர். (ச-[illegible])




கச்சதீவில வருசத்தில ஒருநாள் தான் திருவிழா. ஆனால் அந்தத் திருவிழாவை வைச்சு வருசம் முழுக்க கதைச்சுக்கொண்டே இருக்கலாம். அப்பிடி அந்தத் திருவிழாவில நல்லதும் நடக்கும், கெட்டதும் இருக்கும். இந்தமுறையும் அப்பிடி நல்லது கெட்டதுக்கு கச்சதீவில குறையில்லை. அதில பட்சியின்ர கண்ணில அம்பிட்ட விசயமொண்டைக் கட்டாயம் சொல்லத்தான் வேணும்.

ஆக்கள் இல்லாத , கொஞ்ச நேவிக்காரர் மட்டும் இருக்கிற தீவெண்ட படியால கச்சதீவுக்குப் போற சனத்துக்காக இஞ்சயிருந்து தான் எல்லாம் கொண்டு போகோணும். இந்தியாவில இருந்தும், இஞ்ச இருந்தும் கச்சதீவுக்கு வாற ஆக்களின்ர தொகை எப்பிடியும் எட்டாயிரத்துக்கு குறையாது. இவ்வளவு நாளும் ஆக்கள் இருக்காத அந்தத் தீவில திடீரெண்டு எட்டாயிரம் பேருக்கும் வசதியள் ஒழுங்கா இருக்காது. அதோட சின்னத் தீவு எண்டபடியால பகலில கடும் வெக்கையும், இரவில கடும் குளிராவும் இருக்கும், இப்பிடியான நிலையில அங்கவாறவைக்கு வருத்தங்கள் வாறதுக்கும் சான்ஸ் கூட, அதோட படகில தான் எல்லாரும் கச்சதீவுக்கு வாறவை. அப்பிடி வரேக்க படகில ஏறேக்கையும், இறங்கேக்கையும் விழுகிறதுக்கும், அடிபடுறதுக்கும் சான்ஸ் கூட இருக்கு. இப்பிடி வருத்தங்களுக்கும், திடீரெண்டு ஆருக்கும் ஒண்டு நடந்தால் அதைச் சமாளிக்கிறதுக்கும் யாழ்ப்பாணத்தில இருந்து ஒரு மருத்துவக்குழு அங்க போய், தற்காலிக கொட்டகை போட்டு, அதை ஆஸ்பத்திரியாக்கி ஏலாத ஆக்களுக்கு ட்ரீட்மெண்ட் செய்யிறவை. அப்பிடி சனத்துக்காகச் சேவை செய்ய வெண்டு, மினக்கெட்டு கச்சதீவுக்குப் போற மருத்துவக் குழுவை உண்மையில பாராட்டத்தான் வேணும்.

எண்டாலும் இந்தமுறை மருத்துவக்குழு கடைசிநாளில செய்த ஒருவேலை, கனபேருக்கு இடறலாவே இருந்தது. அதென்னெண்டால், ஞாயிற்றுக்கிழமை பூசை முடிய எல்லாரும் கச்சதீவைவிட்டு போறதுக்கு படகுக்கு போகத் தொடங்கிட்டினம். கச்சதீவில நிக்கிற எல்லாரும் ஒரேயடியாப் போகேலாது தானே. அவை முழுப்பேரும் கட்டம் கட்டமா படகில ஏறி அங்கையிருந்து போறதுக்கு எப்பிடியும் பின்னேரம் ஆகிடும். அதால படகில ஏறுறதுக்கு தள்ளுமுள்ளுப்பட்டு முன்னுக்கு வெளிக்கிடுற படகில ஏறத்தான் எல்லாரும் அந்தரப்படுவினம். அந்தநேரம் ஆக்களுக்கு காயங்கள் வரலாம், கடலுக்க விழலாம். மூச்சுத்திணறல் எடுக்கலாம். கனநேரம் வெயிலுக்க, ஆக்கள் வெக்கைக்குள்ள நசிபடுறதால மயங்கி விழலாம். இப்பிடி நிறையப் பிரச்சினையள் வாறதுக்கு சான்ஸ் இருக்கு. அதால மருத்துவக்குழுக்காரர் எல்லாரும் போனபிறகுதானே வெளிக்கிடோணும். ஆனால் இந்தமுறை மருத்துவக்குழுவா போனவை பத்துமணிக்கே மூடை முடிச்செல்லாம் கட்டி வெளிக்கிட்டினமாம். தற்சமயம் அதுக்குப் பிறகு ஆருக்கும் ஏதும் அசம்பாவிதம் நடந்தால், அவைக்கு ட்ரீட்மெண்ட் செய்ய ஒருத்தரும் அங்கையில்லை. அதைவிட பத்துமணிக்கே மூடை முடிச்சோட, படகு வந்து நிக்கிற வத்தையடிக்குப் போன இந்த மருத்துவக்குழு ரண்டுமணி போலதான் படகேறினதாம், அதுவரைக்கும் அங்க இருந்த சனநெரிசலை இன்னும் கூட்டிக்கொண்டு, அதில அவை நிண்டநேரத்துக்கு தங்கட கூடாரத்துக்க இருந்து தேவையான ஆக்களுக்கு மருத்துவ உதவி செய்திருக்கலாமே. மருத்துவக் குழு எண்டால் கடைசி மட்டும் களத்தில நிக்கோணுமெல்லோ. அடுத்தமுறையாவது இப்பிடி நடக்காமல் உரியவை பார்த்துக் கொள்ளுவினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)


**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.


**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற் பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.


**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கி விடுவது நல்லது. தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.


**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.


**கன்னி:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.


**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.


**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.


**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். பணிச்சுமை அதிகரிக்கும்.


**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்
# 2025 - 2027




கிரகப்பெயர்ச்சிகளில் முக்கியமான கிரகப் பெயர்ச்சியாகப் பார்க்கப்படுவது சனிப்பெயர்ச்சி. நாம் செய்யும் கர்மங்களுக்கு ஏற்ப நல்ல பலன்களையும், கெடுபலன்களையும் கொடுப்பவர் சனி பகவான். அதனால், சனிபகவானின் பெயர்ச்சி என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மீன ராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீனராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

## சிம்மம்



எதிலும் துடிப்புடனும், ஈடுபாட்டுடனும் ஈடுபடும் சிம்ம ராசி அன்பர்களே! எளிதில் உணர்ச்சிவசப்படுபவர் நீங்கள். உங்கள் கடமையிலும், காரியத்திலும் கண்ணாக இருப்பீர்கள். சோம்பலை விரும்பமாட்டீர்கள். எந்த வேலையையும் முதல் முறையிலேயே முடிக்க வேண்டும் என நினைப்பவர்கள் நீங்கள். தலைமைதாங்கும் பண்பை இயற்கையிலேயே உடையவர்கள்.

| நட்சத்திரம் | சனியின் நிலை |
|---|---|
| மேடம் | நீசம் |
| இடபம் | நட்பு |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | பகை |
| சிம்மம் | பகை |
| கன்னி | நட்பு |
| துலாம் | உச்சம் |
| விருச்சிகம் | பகை |
| தனுசு | நட்பு |
| மகரம் | ஆட்சி |
| கும்பம் | ஆட்சி |
| மீனம் | நட்பு |

கிரகநிலை இதுவரை உங்களது களத்திரஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி அஷ்டமஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் பஞ்சமபூர்வ புண்ணிய ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

இந்தப் பெயர்ச்சியில் சனிபகவான் செழிப்போடு செல்வாக்கையும் உங்களுக்கு அள்ளித் தருவார். அனைத்துக் காரியங்களிலும் சராசரிக்கும் கூடுதலான வெற்றிகளைக் காண்பீர்கள். சேமிப்புகளை ஆதாயம் தரும் விஷயங்களில் முதலீடு செய்வீர்கள். திட்டமிட்டுச் சரியாகச் செயலாற்றுவீர்கள். கடினமாக உழைத்து இலாபமடைவீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் உண்டாகும். தொழிலில் புதிய வாய்ப்புகளைப் பெறுவதற்காக அடிக்கடி பயணங்களை மேற்கொள்வீர்கள்.

உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும். திறமைகள் பளிச்சிடும். குழந்தைகளை கண்டிப்புடன் வளர்ப்பீர்கள். அதேநேரம் அவர்களின் மகிழ்ச்சிக்காக சுற்றுலாவும் சென்று வருவீர்கள். பதற்றப்படாமல் உங்கள் செயல்களை செய்து முடிப்பீர்கள்.

**வியாபாரிகளுக்கு:** கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் எந்தக் குறையும் ஏற்படாது. ஆனாலும் எதிலும் கவனமாக இருக்கவும். புதிய முதலீடு களைக் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே செய்யவும்

**கலைத்துறையினருக்கு** அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பணமும் உங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும். சக கலைஞர்கள் நட்புடன் பழகுவார்கள். அவர்களால் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். அதேநேரம் சோம்பலுக்கு இடங்கொடுக்காமல் உங்கள் காரியங்களைச் செய்யவும்.

**பெண்கள்:** இல்லத்தில் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். கணவரிடம் பாசத்தோடு பழகுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். தேவையற்ற கவலைகள் சிலருக்குத் தோன்றலாம். மாணவமணிகள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**மகம்:**
குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் பேச்சை கேட்டு செயற்படவேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளு டன் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள், நண்பர்கள் மூலம் கிடைக்கும் உதவி தாமதப்படும். கூடுதலாகச் செய்யும் முயற்சிகள் மூலம் விரும்பியபடி காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**பூரம்** வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழிலில் திடீர்ப் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளைப் பேசுவதை தவிர்ப்பது நல்லது. மன நிறைவடைவதற்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது. எடுத்துக்கொண்ட வேலைகளில் ஏதாவது வேண்டாத பிரச்சினை தலை தூக்கலாம். மாணவர்கள் எதிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது.

**உத்திரம்:** பணவரவு அதிகமாகும். பேச்சின் இனிமை சாதூரியம், இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும்.
தந்தையுடன் அனுசரித்து செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இடைவிலகலை இல்லாதொழிப்போம்

நாட்டில் 29 சதவீதமான மாணவர்கள் கல்வி நட வடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளனர் என்று ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. உலகளாவிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படட மாணவர் சுகாதார ஆய்வறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் நாட்டில் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்திய பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களின் தொகை இதை விட அதிகம் என்றே கல்வித்துறை சார்ந்தவர்கள் கூறுகின்றனர். கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வளர்ச்சியடையும் நிலையில், நாட்டின் எதிர்காலத்துக்குப் பேராபத்தாக மாறக்கூடிய இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு போதிய நட வடிக்கைகள் எடுக்கப்படுக்கப்படுவதில்லை.

கல்வி நடவடிக்கைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. வறுமை, குடும்பப் பிரச்சினைகள், கல்வியில் ஆர்வமின்மை, பாதுகாப்பற்ற சூழல் போன்றவற்றுடன் தற்காலத்தில் போதைப்பொருள் பழக்கம் மாணவர்கள் மத்தியில் அதிகரித்திருப்பதும் அவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ளாதிருப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. அதேநேரம் நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியதால், சமாளிக்க முடியாதளவு வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது. இதனால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கற்றல் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தி, அவர் களை வேலைக்கு அனுப்பத் தொடங்கியுள்ளனர். அப்போது தான் அவர்களின் குடும்பநிலை இந்தப் விலையேற்றங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியும்.

கற்றல் நடவடிக்கைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவது ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்தாலும், அதை சரிசெய்வதற்கான முறையான திட்டங்கள் எவையும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றே கூறலாம். கல்வி அமைச்சு மாணவர் இடைவிலகல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றது என்று கூறப்பட்டாலும், எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, அவற்றின் பெறுபேறுகள் என்ன என்பது தொடர்பாகப் பகிரங் கப்படுத்தப்படுவதில்லை. உண்மையைச் சொல்லப்போனால் இடைவிலகிய மாணவர்கள் தொடர்பாகச் சரியான தரவுகள் பேணப்படுகின்றதா என்பதே சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது. ஆனால் இந்த நிலைமை தொடருமானால் எதிர்காலத்தில் நாட்டில் கல்வியறிவில் பின்தங்கிய 'தொழில்வாண்மையற்ற ஒரு குழாம் உருவாகும். அவ்வாறான நிலைமை நாட்டின் அபிவிருத்தியிலும் ' சமூகக் கட்டமைப் பிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்பதே ஆபத்தான உண்மை.

இந்த நிலைமையைத் தொடரவிடாது அனைவருக்கும் கட்டாயக் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவது அவசியமானது. குறைந்தபட்சம் கா.பொ.த. உயர் தரத்தைக் கற்றுமுடிக்காது பாடசாலையில் இருந்து இடைவிலகுவதைத் தடுப்பதற்குரிய சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்படுவது சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும். அதேநேரம் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் சிறுவர் தொழிலாளர்களாக அமர்த்தப்படுகின்றனர் என்பதும் ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருக்கின்றது. சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள் உள்ளபோதும், அவை எழுத்து வடிவில் மட்டுமே இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியோர் அலட்சியமாக இருப்பதால், சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதன் ஊடாகவும் பாடசாலை இடை விலகல் வீதத் தைப் பெருமளவு குறைக்க முடியும்.மாணவர்கள் கல்வி நடவடிக்கையில் இருந்து இடைவிலகு வது எதிர்காலத்தில் எவ்வாறான பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து அரசாங்கமும், ஏனையோரும் அதீத கரிசனையுடன் செயற்படுவது அவசி யம். கல்வியறிவே சிறப்பான எதிர்காலத்துக்கும், ஆராக்கியமான சமூகத்துக்கும், செழிப்பான நாட்டுக்கும் வழிவகுக்கும் என்பதை உணர்ந்து பெற்றோரும் செயற்பட வேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

நம் தன்னம்பிக்கை, திட்டம் மற்றும் நடவடிக்கை தீவிரமாயிருக்கும்போது நாம் எவ்வளவு சிறியவர் என்பது ஒரு விஷயமே அல்ல.

– பிடல் காஸ்ட்ரோ–




# வருமானம் குறைந்தவர்களுக்கு புத்தாண்டு நிவாரணப் பொதி!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தகவல்



கொழும்பு, மார்ச் 21

**நாட்டில் உள்ள வருமானம் குறைந்த 8 லட்சத்து 33 ஆயிரம் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண உணவுப் பொதியை 2 ஆயிரத்து 550 ரூபாவுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண பொதி ஒன்றை சதொச ஊடாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது. அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆயிரம் மில்லியன் ரூபாவை ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 1.7 மில்லியன் மக்களுக்கு அஸ்வெசும வழங்கப்படுகிறது. 8 இலட்சத்து 33 ஆயிரம் மக்கள் அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்துக் காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர். இந்த நிவாரண உணவுப் பொதி காத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

சதோச விற்பனை நிலையங்கள் ஊடாகவே இவை வழங்கப்படும். என்றார். (எஇ)

# பட்டமளிப்பை முன்னிட்டு ஒரு வழியூடாகவே போக்குவரத்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ. பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு கலட்டி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்தி நோக்கியதான வீதி ஒரு வழிப் போக்குவரத்துக்கு மட்டுமே அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் நாளை சனிக்கிழமை வரை 4 நாள்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை இது நடைமுறையில் இருக்கும். இந்தக் காலத்தில் வீதியைப் பயன்படுத்துவோர் மாற்று ஒழுங்கினைக் கையாளுமாறு மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-25)

# ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வியமைச்சின் செயலாளர் நாலக களுவேவ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார், திருகோணமலை, அம்பாறை, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# போதைப்பொருள்கள் 19 கிலோ கைப்பற்றல்

கொழும்பு,மார்ச் 21

கொழும்பு 12 பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 19 கிலோ 'ஹஷிஷ்' போதைப்பொருள் மற்றும் ஒரு தொகை ஐஸ் போதைப்பொருள் ஆகியவற்றுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# 15,921 வெற்றிடங்களுக்கு அரசசேவையில் ஆட்சேர்ப்பு

அரச சேவையில் காணப்படும் 15 ஆயிரத்து 921 வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக பத்து அமைச்சுகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் காணப்படும் 7ஆயிரத்து 456 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

அடுத்த கட்டமாக மிகுதி 5 ஆயிரத்து 882 வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் சகல வெற்றிடங்களும் போட்டிப்பரீட்சைகள் முலமே நிரப்பப்படு மெனவும் தெரிவித்துள்ளார். (ச-6)

நாளை

சனிக்கிழமை-பங்குனி- 08

22.03.2025

சுபநேரம் : 03.17 - 04.47
ராகுகாலம் : 09.17 - 10.47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# த.தே.ம. முன்னணி யாழில் வேட்புமனு

யாழ்ப்பாணம்,மார்ச் 21
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்துள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இந்த வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது பல்வேறு கட்சிகளையும் இணைத்து புதிய ஒரு கூட்டணியாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் வடக்கு - கிழக்கு முழுவதும் போட்டியிடவுள்ளது. (ச-20)

# உள்ளூராட்சிமன்ற அதிகாரங்கள் தமிழர் கையில் இருக்கவேண்டும்

சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



வவுனியா , மார்ச் 21`
உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் தமிழ் மக்களின் கையில் இருக்கவேண்டும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரங்கள் தமிழ் மக்களின் கையில் இருக்கவேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோளாக இருக்கிறது.
உள்ளூராட்சிசபை அதிகாரம் என்பது வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தாங்களே தங்களை ஆளக் கூடிய வகையில் இருக்கவேண்டும்.
அதன்மூலமே வடக்கு - கிழக்கின் இருப்பைத் தக்க வைக்க முடியும் எனத் தெரிவித்தார். (ச-22,18,110)



# வவுனியா மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி வேட்புமனு

வவுனியா,மார்ச் 21
எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக்கட்சி வவுனியாவில் நேற்று தாக்கல் செய்தது.
வவுனியா மாநகரசபை மற்றும் வவுனியா வடக்குப் பிரதேசசபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவையே தாக்கல் செய்திருந்தது. வேட்புமனுவை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையிலான குழுவினர் கையளித்திருந்தனர். (ச-18)

# காரைநகர்ப் பிரதேசசபையில் மான் வெற்றிக்கொடி நடும்!

*முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மார்ச் 21
காரைநகர்ப் பிரதேசசபைத் தேர்தலில் மான் சின்னம் அனைத்து வட்டாரங்களிலும் வெற்றிபெறும் என்று காரைநகர்ப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
தமிழ் மக்கள் கூட்டணியின் மத்தியகுழு உறுப்பினரும் யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வருமான சட்டத்தரணி மணிவண்ணனுடன் இணைந்து காரைநகர்ப் பிரதேசசபைக்கான வேட்புமனுவைக் கையளித்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
எமக்குக் காரைநகர் மண்ணின் அபிவிருத்தியே இலக்கு. சின்னங்கள் மாறினாலும் எனது எண்ணங்கள் மாறாது. எனதுசேவையை, எனது காரைநகருக்கான அர்ப்பணிப்பை மக்கள் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டு மான் சின்னத்தில் போட்டியிடும் 6 வட்டார வேட்பாளர்களை வெற்றிபெற வைப்பர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)



# யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சி வேட்புமனுத்தாக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ். மாவட்டத்தில் உள்ளள 12 உள்ளூராட்சி சபைகளுக்கான சபைகளுக்கு வேட்புமனுத் தாக்கலை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று கையளித்தது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள 5 பிரதேசசபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று 12 சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. (ச-125,27)


# ஐக்கிய மக்கள் சக்தி வவு.வில் வேட்புமனு

வவுனியா,மார்ச் 21
எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் சக்தி நேற்று தாக்கல் செய்தது
வவுனியா மாநகரசபை, வவுனியா வடக்குப் பிரதேசசபை, வெண்கலசெட்டிக்குளம் பிரதேசசபை, தெற்கு தமிழ்ப் பிரதேசசபை, சிங்கள பிரதேசசபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவே தாக்கல் செய்யப்பட்டது. (ச-10)



# சிங்களப் பிரதேசசபையிலேயே வவுனியாவில் பெரமுன போட்டி

வவுனியா,மார்ச் 21
எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன நேற்றுத் தாக்கல்செய்தது.
வவுனியாவில் ஐந்து உள்ளூராட்சிமன்றங்களில் சிங்களப் பிரதேசசபையில் மாத்திரம் குறித்த கட்சி இம்முறை போட்டியிடவுள்ளது. (ச-110)



# வவுனியாவில் தே.ம. சக்தி தனிச்சிங்களத்தில் வேட்புமனு

வவுனியா,மார்ச் 21
எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் வவுனியாவில் 5 சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி நேற்றுத் தாக்கல் செய்தது.
வேட்புமனுவை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தலைமையிலான குழுவினர் தாக்கல் செய்தனர். இந்தநிலையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உட்பட அனைத்துச் சபைகளுக்கும் வேட்புமனுப் பத்திரங்கள் அனைத்தும் சிங்களமொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.
வடக்கில் தமிழ்மக்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ்மொழியைத் தவிர்த்து தனிச் சிங்களத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தமை பலரையும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு ஆதரவளித்ததாலேயே சங்குத் தரப்பிலிருந்து விலகல்!

## சட்டத்தரணி சிறீகாந்தா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

**ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாங்கள் இணைந்து செயற்பட்ட நிலையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அளித்த வாக்கு எம்மை அதிருப்தியடையச் செய்தமையையிட்டே அந்தக்கூட்டிலிருந்து விலகி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்துள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர் சட்டத்தரணி சிறீகாந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கஜேந்திரகுமார் உள்ளிட்டோருடன் நாங்கள் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரே இணைந்து பணியாற்றியுள்ளோம். இது தேர்தல் கூட்டு அல்ல. கொள்கை அடிப்படையிலான கூட்டணி. அந்தவகையில் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்தில் தமிழர் பிரதேசத்தில் போட்டியிடவுள்ளோம். நாங்கள் ஒன்றாகப் பயணித்து துணையாகப் பலமாகச் செயற்படுவோம். பௌத்த சிங்கள வாதிகளின் கோர பற்களைப் பிடுங்கி எறிய வேண்டும். இந்தத் தலைமை நிச்சயம் நேர்மையாகச் செயற்படும்- என்றார். (ச-125)



## யாழ். பல்கலையில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். பல்கலைக்கழக 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் 'அறிவமுது' மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது. நாளை சனிக்கிழமைவரை பொதுப் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ள நிலையில் நான்கு நாள்களிலும் புத்தகக் கண்காட்சி நடைபெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-25,66)

## நிறுவுநர்தின நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுனர்தின நிகழ்வு, சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பேராசிரியர் வீ. அரசு (தமிழ் நாடு) இன் சிறப்புரை இடம்பெறும். "பணியால் நிறைந்த சால்பினர்" எனும் நூல் வெளியீடும், சங்க உத்தியோகத்தர்களின் கௌரவிப்பும், வாத்திய சங்கமமும் இடம்பெறவுள்ளன. (ச-25,9)



## வல்வெட்டித்துறையில் சுயேச்சைக்குழு வேட்புமனு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வல்வெட்டித்துறையின் முன்னாள் நகரபிதா செல்வேந்திரா தலைமையிலான சுயேச்சைக்குழு வல்வெட்டித்துறை நகரசபைக்கான வேட்புமனுவை நேற்றுத் தாக்கல்செய்தது. வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் பொது அமைப்புக்களாக இணைந்து கூட்டணி அமைக்க ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பன தங்களுடைய ஆதரவைத் தரவுள்ளன என இதன்போது அவர் தெரிவித்தார். (ச-125)

## சதுரங்கப்போட்டி இணுவிலில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், மார்ச் 21

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு லம்போதரா விளையாட்டுக்கழகத்தால் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவாக வருடாந்தம் நடத்தப்படும் மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை07.30 மணியளவில் இணுவில் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது.

சதுரங்கச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களை உரிய நேரத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

## தேசியமக்கள் சக்தியின் யாழ்.மாநகர மேயர் வேட்பாளராக விரிவுரையாளர் கபிலன்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகர சபையின் மேயர் வேட்பாளராக ஏழாலையைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடும் தேசியமக்கள் சக்தி நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் சந்திரசேகர் இதனைத் தெரிவித்தார்.

இதில் தேசியமக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரன் றஜீவன், கருணநாதன் இளங்குமரன் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர். (ச-66-125)

## மணிவிழா



யாழ். கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர் கணேசபிள்ளை உமாகரனின் மணிவிழா நிகழ்வு அதிபர் திருமதி உமாவதி ரவீகரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25,125)

## 33 கிலோ ஹெரோய்னுடன் ஒருவர் கைது



கொழும்பு, மார்ச் 21

திக்வெல்ல ஊறுகமுவ பகுதியில் 33 கிலோக்கிராம் ஹெரோய்னுடன் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் 66 கோடி ரூபாய் பெறுமதியானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## சிங்களவருக்கான காணிகள்; யாழில் கோரிக்கையில்லை!

### யாழ். மாவட்டச் செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். மாவட்டத்தில் சிங்களவர்களுக்குக் காணிகள் என உரித்துக்கோரிக்கை எவையும் முன்வைக்கப்படவில்லை என யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

தென்பகுதியில் உள்ள சிங்களவர்களால் யாழ்.மாவட்டத்தில் தமக்குக் காணி உரித்துள்ளதாகத் தெரிவித்து கடிதம் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டதா ? எத்தனை கோரிக்கைகள் விடுக்கப்பட்டன? எந்த மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களால் விடுக்கப்பட்டன? போன்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் அவ்வாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையம் நடத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கைதடி நாவற்குழிப் பிரதேச மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சிவ. இ. குழந்தைவடிவேலுவின் ஆலோசனைப்படி திருமதி சி. கிருஷ்ணமூர்த்தி ஒழுங்கமைப்பில் குமரன் கல்விநிலைய அதிபர் ச. சிவகுமார்(பி.ஏ) தலைமையில் அருள்மிகு ஸ்ரீ சச்சிதானந்த நூல்நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-41-159)



வேலணைப் பிரதேச செயலக மகளிர் அலகினர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினர் ஆகியோரின் இணை ஏற்பாட்டில், பன்னாட்டு மகளிர் தினவிழா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)



போக்கட்டி அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அதிபர் திருமதி தர்ஷினி சுதாகரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 159)



முன்பள்ளி ஆசிரியராக 33 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளியின் ஆசிரியர் திருமதி சுகந்திதேவி தமிழ்ச்செல்வனுக்கு பாராட்டு விழா நிர்வாகக்குழுத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை புவேந்தன் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-22,159)



வேலணைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் ஆக்கத்திறன் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25,9)








கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரிப் பிரதேச செயலாளர் த. அகிலன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் க. குமரன், கௌரவ விருந்தினராக முல். நெத்தலியாறு அ.த.க பாடசாலை அதிபர் ப. துஷ்யந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41,159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
15 . 11 . 1948



உதிர்வு
20 . 03 . 2025

## மேரி பிலோமினா மதுரநாயகம் (மலர்)

மடம் வீதியைப் பிறப்பிடமாகவும், மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிபிலோமினா மதுரநாயகம் (மலர்) அவர்கள் நேற்று (20.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மதுரநாயகம் அவர்களின் அன்பு மண்ணவியும், காலஞ் சென்றவர்களான நல்லையா - தங்கமணி தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பரிபூரணம் தம்பதியின் மருமகளும். டன்ஸ்ரன், டன்ஸ்ரலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரன் கேமா குயின், மற்றும் காலஞ்சென்ற விஜயகுமாரின் அன்புச் சகோதரியும் றோசறி சர்மினியின் அன்பு மாமியாரும், பொன்பிலியா, கபிறியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (21.04.2025) வெள்ளிக்கிழமை பி.ப 2.00. மணிக்கு . இலக்கம் 16/1A, மருதடி வீதியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பரிசுத்த மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். .

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 644 5999**

(CS/2777) J-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

தோற்றம்
08 . 09 . 1953



மறைவு
01 . 04 . 2024

## அமரர் லிங்கச்சாமி அன்னலட்சுமி

அன்னை நீ எமை வாழ்த்தி
விடை பெற்றுச் சென்றாய் !
எத்தனை குடும்பம் வாழ
வழி செய்து மறைந்தாய் !
ஓராண்டு விரைந்தோடிப் போனது !
நீயின்றி தனிமை வாட்டுது !
உன் நினைவுகள் நெஞ்சில் நிறைந்தது
நீங்காமல் துயரம் தருது !

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி**

(cs.57722) (N-1)

**குடும்பத்தினர்**


# சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதபிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் ஆசிரியர் திருமதி.ராகினி பிரசாந்தனன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-41-66)

# மரண அறிவித்தல்

## சச்சீதானந்தமூர்த்தி தங்கச்சிப்பிள்ளை



தோற்றம் 05.05.1938 — மறைவு 20.03.2025

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தமூர்த்தி தங்கச்சிப்பிள்ளை அவர்கள் நேற்று (20.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சச்சிதானந்தமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், அன்னம்மா, அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி அவர்களின் அன்பு மைத்துனியும், சுதர்சன் ( அபிவிருத்தி உத்தியோகத்தர் - PMCU, உரும்பிராய்), அவர்களின் அன்புத் தாயாரும், தவநந்தினி, சுரேந்திரராஜ், ரவீந்திரராஜ், சுபோதினி ஆகியோரின் அனபு மாமியாரும், அக்ஷயனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(CS/ 2778) J-1

**தகவல் :**
**மகன்**
**076 736 1649**


# ஆவணகம் வழங்கும்

## 60 வது ஆவணக் கண்காட்சி

எமது வரலாறு சார்ந்த முன்னோரின் வாழ்வியல்
சம்பந்தமான தேடல்களின் ஒரு பகுதி
உங்கள் பார்வைக்கு....

**மார்ச் 20-21-22, 2025,**
**காலை 09 மணி முதல் மாலை 08 மணிவரை.**

**Loyala's Hall**
St.Patricks Road
Jaffna, Sri Lanka.

- ✓ ஓலைச்சுவடிகள்
- ✓ முத்திரைகள்
- ✓ பண்டைய தற்போதைய நாணயங்கள்
- ✓ பத்திரிகைகள் / வரலாற்று நூல்கள்
- ✓ நம்மவர் வரலாற்றுப் பதிவுகள்

எங்களது முன்னோர்களது வரலாற்றை அறிந்து
கொள்வோம்!!!! அனுமதி இலவசம்.
உங்கள் ஆதரவுடன்

**அன்ரன் யோசப்**
**0049 157 559 66419 (Whatsapp)**

(CR/44622) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதமரின் பங்கேற்புடன்

# யாழ்ப்பாணத்தில் மே மாதம் கனேடிய வர்த்தக மாநாடு!

**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**யாழ். குடாநாட்டு இளைஞர் யுவதிகளின் கல்வி மற்றும் தொழிற்றுறை குறித்த எதிர்காலக் கனவுகளை நனவாக்கிக்கொடுக்கும் வகையில் கனேடிய - இலங்கை வர்த்தக சம்மேளனத்தால் கல்விக் கண்காட்சியும் யாழ்ப்பாண முதலீட்டு வர்த்தக மாநாடும் எதிர்வரும் மே மாதம் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் யாழ்.வலம்புரி விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளன.**

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கனேடிய - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் முகமட் ஹமீட் இதனைத் தெரிவித்தார்.

குறித்த மாநாட்டின் முதலாம் நாளில் கனடா மற்றும் பிறசந்தைகளுக்கு இலங்கை மாணவர்களைப் பணிக்கமர்த்தல், இலங்கையில் கனேடியக் கல்வியை வழங்குதல், தொழிற்பயிற்சிகள், திறன் மேம்பாட்டை நிறுவுதல், கனடாக் கல்வி, திறன்பயிற்சி உரிமையாளர்களை ஊக்குவித்தல், திறன் இடப்பெயர்வு, வேலைவாய்ப்புக்கான பயிற்சி மற்றும் திறன்களை மேம்படுத்தல் போன்றன இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். வேலைவாய்ப்பும் தொழிலாளர்களுக்கான சாதக நிலைகளை உருவாக்கல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கல், பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கல், விவசாயம், மீன்வளர்ப்பு, சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான எதிர்காலத் திட்டங்கள், முதலீடுகளை உருவாக்குதல் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளன. இந்தச் செயலமர்வினூடாக கனடாவிலிருந்து முதலீடுகளை வடபகுதிக்குக் கொண்டுவரவும், இலங்கையிலிருந்து சென்று வெளிநாடுகளில் கற்று மாணவர்களின் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை வடக்கின் இளைஞர் யுவதிகள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கையின் பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார். (ச-41-125)



## வடக்கின் சுகாதார சேவையை மறுசீரமைக்க நடவடிக்கை

### ஆளுநர் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

3 தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையில் ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு ஆளணி மறுசீரமைப்பு, வெற்றிடமாகவுள்ள ஆளணிகளை நிரப்புதல் என்பவற்றுக்கு மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியைப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு சுகாதாரத்துறையினருடன் வடக்கு மாகாண ஆளுநர் கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்த கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எட்டப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள 4 சிகிச்சை நிலையங்களின் செயற்பாடுகளையும் வினைத்திறனுடன் இயங்க வைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை, மாங்குளம் ஆதார மருத்துவமனை, வவுனியா மாவட்ட மருத்துவமனை ஆகியனவற்றில் விசேட சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டாலும் அவற்றின் தேவைப்பாடுகள் முழுமைப்படுத்தப்படாமையால் வினைத்திறனுடன் செயற்படமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ச-27,113)



## தொழில் முயற்சியாளர்கள் மன்னாரில் மதிப்பளிப்பு

மன்னார் றோட்டரிக் கழகமும் மன்னார் குடும்பநலப் பணியமும் இணைந்து ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வும் பெண் சுயதொழில் முயற்சியாளர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் குடும்பநல பணியகத்தின் முன்றலில் இடம்பெற்றன. நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் ஐந்து பிரதேசங்களின் பிரதேச செயலாளர் ஊடாக சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ச-41-213)

## குருதிக்கொடை

வருடந்தோறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் அலுவலகத்தால் உலக நீர் தினத்தை நினைவு கூரும் வகையில் நடத்தப்படும் குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் வரை கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இரத்ததானம் செய்யவிரும்புவோரை இந்த உன்னத முயற்சியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 0773905086 எனும் தொலைபேசி இலக்கத்தைத்தொடர்புகொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41)



## ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினரின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அதிதிப் பேச்சாளர் ஆ.வடிவேலு கலாசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார். (ச-41-66)



## முதலீடுகளை ஈர்த்தல் பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் ஏற்பாட்டில், 'வட மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்' தொடர்பான இரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதில் யுனொப்ஸ் நிறுவனத்தில் கென்யாவில் பணிபுரியும் கலாநிதி வி.நவநீதன் பயிற்சிக் கருத்தரங்கின் வளவாளராகக் கலந்துகொண்டார். (ச-25, 27)

## தேர்தல் நியமனப் பரிசீலிப்பு; அலுவலர்களுக்கு விளக்கம்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைப் பரிசீலிப்பதற்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாவட்டச்செயலர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் நியமனப் பத்திரங்களைப் பரிசீலிப்பது தொடர்பான கடமைகள், பொறுப்புகள் தொடர்பாக மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் இ.சசீவனால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-25,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னக்கோனைப் பிடிக்கமுடியாத அரசாங்கம் வெட்கப்படவேண்டும்!

## சமிந்த விஜேசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

**தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்படவில்லை. அவர்தானாகவே நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். 75 ஆண்டுகால அரசாங்கங்களை விமர்சித்துக்கொண்டு, எதிர்க்கட்சிகள் மீது சேறுபூசும் இந்த அரசாங்கம் இதற்காக வெட்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு கையெழுத்தின் ஊடாக அரிசிமாபியாக்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைகின்றன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. ஆளும் தரப்பின் பின்வரிசை உறுப்பினர்கள் அரசாங்கத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். நாங்களும் எமது அரசாங்கத்தில் தலைவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனால் அது பொய் என்பதை பின்னர் தெரிந்துகொண்டோம். ஆளும் தரப்பில் முன்வரிசையில் 'டைகோட்' அணிந்திருப்பவர்கள் ஊழலுக்குப் பெயர் போனவர்கள். நாங்கள் கூறுவதை ஆளும்தரப்பின் பின்வரிசை உறுப்பினர்கள் வெகு விரைவில் விளங்கிக் கொள்வார்கள். கடந்த காலங்களில் அநுரகுமார திஸாநாயக்க, பிமல் ரத்நாயக்க மற்றும் சுனில் ஹந்துனெத்தி ஆகியோர் நாடாளுமன்றத்தில் ஊழல் மோசடிகள் பற்றிப் பேசுவார்கள். பின்னர் நாடாளுமன்ற சிற்றுண்டிச் சாலையில் ஊழல்வாதி என்று குற்றஞ்சாட்டிய நபருடன் அமர்ந்து மதிய உணவை உட்கொள்வார்கள். இதுதான் உண்மை. இப்போது எதிர்க்கட்சிகள் மீது சேறு பூசிக் கொண்டிருக்கின்றீர்கள். ரணிலைப் பற்றி அரசாங்கம் நன்கு அறியும், அரசாங்கத்தைப் பற்றி ரணிலும் நன்கு அறிவார். எதிர்வரும் காலங்களில் மக்கள் மத்தியில் அரசாங்கத்தால் செல்ல முடியாத நிலை ஏற்படும்-என்றார். (எ-இ)

# மாணவி கிரிஜா அருள்பிரகாசத்துக்கு நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி கிரிஜா அருள்பிரகாசத்துக்கு வழங்கப்படவுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு விழா தற்போது நடைபெற்று வருகின்றது. பட்டமளிப்பு விழாவின் இறுதி அமர்வின்போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச்சித்தி பெற்ற மாணவியான மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவைச் சேர்ந்த கிரிஜா அருள்பிரகாசத்துக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இராணுவ ஊரடங்கு வேளையில் அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவரது பாடசாலை நண்பர்களான யாழ் இந்துக்கல்லூரியின் 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் 'நிலா நிதியம்', யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு நிலக்சன் ஞாபகார்த்தமாக இந்த விருதை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம,26)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 04 . 1933



மறைவு
19 . 03 . 2025

**சபாபதிப்பிள்ளை செல்வராசா**

மலேசியாவை பிறப்பிடமாகவும், வல்லை வீதி சங்கானையை பூர்வீகம் வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை செல்வராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (19.03.2025) அன்று காலமானார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை - தங்கம் தம்பதியின் அன்பு மகனும், நல்லையா - யோகம்மா தம்பதியின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், செல்லத்துரை, நவரத்தினம், துரைராசா ராங்கநாதன், விஸ்வநாதன், கனகலட்சுமி, கனகாம்பிகை இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின பாசமிகு சகோதரனும், கௌரிஜெகதாம்பாள், (ஜெர்மனி), யோகேஸ்வரன் (இங்கிலாந்து), கௌரீஸ்வரன் (கனடா), கமலாம்பாள் (இங்கிலாந்து), ஞானபூங்கோதை, (இங்கிலாந்து), உதயசயந்தன் (பிரான்ஸ்), கிருபாகரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு தந்தையும், அதிஸ்டலெட்சுமிதேவி, சுசிலாதேவி, தனலட்சுமி, பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவபாலன், துசியந்தி, சுரேசன் சிறிகரன், சர்வேஸ்வரி, உமாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகாமி, நிலானி, ரொஷானி, யதுர்ஷன், பவித்திரா, கயனி நயனி, வர்ஷினி, காயத்திரி, கார்த்திகேயன், விதுஷன், விதுமிளா நந்தனா, வைஸ்ணவி, வர்ஜினி மகாஸ்ரீ தியாஸ்ரீ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 245 4345**

*CS/27735) J-1



# தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 21

கடந்த பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளதாகத் தேயிலைத் தரகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த மாதம், 2.04 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையுடன் ஒப்பிடுகையில் 1.9 மில்லியன் கிலோகிராம் குறைவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சேவையிலிருந்து தப்பிய 1,600 படையினர் கைது

சட்டபூர்வமாக சேவையில் இருந்து விலகாத முப்படைகளைச் சேர்ந்த 1,600க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 1,394 இராணுவத்தினர் உள்ளடங்குகின்றனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், கைது செய்யப்பட்டவர்களில் 138 விமானப்படை வீரர்களும் 72 கடற்படை வீரர்களும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பனிப்புலத்தில் மாவாவுடன் கைதானோருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

இளவாலை பனிப்புலம் பகுதியில் 250 கிராம் மாவாப் போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூன்று சந்தேகநபர்களையும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் இளவாலைப் பொலிஸார் முற்படுத்தி னர். இதன் போது மூவருக்கும் தலா 10 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டதுடன் நீதிவானால் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட னர். (ச-125)

# உள்ளூர் வர்த்தகப்பொருள்கள் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், மார்ச் 21

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழிசைக் கவித்தடாகம் , சுன்னாகம் பொதுநூலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பெண் தலைமைத்துவ முயற்சியாளர்களின் உள்ளூர் வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் சுன்னாகம் பொதுநூலக வளாகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பி.ப 2 மணிவரை நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து மகளிருக்கான சாறி பிளவுஸ் கட்டிங்பயிற்சியும் இடம்பெறும். நிகழ்வில் ஆர்வமுள்ளவர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பராணி சுப்பிரமணியம்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சுப்பிரமணியம் அவர்கள் 19.03.2025 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் (Work Supervisor KG Industries) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஸஷ்ட புதல்வியும், வேலுப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் சேந்தன் (Sanken), அம்பிகைபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காயத்திரி, தயாளினி, ஆகியோரின் அன்பு மாமியாரும், விஸ்ணுகன், விசாகன், சேயோன் ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.03.2025. வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் நடைபெற்று, பின்னர் பொரளை இந்து மயாணத்தில் தகனக்கிரியைகளுககாக எடுத்துச்செல்லப்படும்**

இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவள்: சேந்தன் - 077 3793015

# உள்ளூராட்சிகளையும் கைப்பற்றியே தீருவோம்

## அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 21

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப் பதற்குரிய பெரும்பான்மை பலத்தை பெறுவதில் தேசிய மக்கள் சக்திக்கு சிக்கல் இருக்காது என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கம்பஹா மாவட்டத்தில் உள்ள இரு மாநகரசபைகள் உட்பட 19 உள்ளூராட்சி சபைகளுக்கும் பலமான அணிகளை களமிறக்கியுள்ளோம். வெற்றி தொடர்பில் சந்தேகம்கொள்ள வேண்டியதில்லை. பொதுத்தேர்தலைப் போலவே குட்டித் தேர்தலிலும் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை உள்ளது. பொதுத் தேர்தலின்போது பெரும்பான்மை பலம் கிடைக்காது என்றார்கள், ஆனால் மக்கள் ஆணை வழங்கினார்கள். எமது பயணம் மக்களுக்குத் தெரியும். எனவே, அனைத்து சபைகளிலும் வெல்வோம்'-என்றார்.

(அ.ம44)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி ஏமி ஜெயதாஸ்**

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி றொபேட் மேரிநிர்மலா**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம். தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 10.10.1944 இறப்பு 19.03.2025

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி


# யாழ்ப்பாணம் மாநகர சபை பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கணக்கெடுப்பில் விற்பனை எனக்காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2025.04.05 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் 2025.04.04 ஆந் திகதி அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 590.00 இனை 2025.04.05 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr44618) (N-1)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 21 . 04 . 1941

ஆண்டவன் அடியில் 20 . 03 . 2025

## இராமலிங்கம் இராஜகோபாலு

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

மீனாட்சி அம்மன் கோவிலடி சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராஜகோபாலு நேற்று (20.03.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான லீலறோஜினி (புவனம்) அவர்களின் அன்புக் கணவரும், பகீரதன், உதயா, குலரஞ்சிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜிதா, முகுந்தன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜிலுக்ஷன், லருஜன், பிரசாந், கபினாஷ், ருசாந், கஜலட்சுமி, பபிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, தம்பையா, ஆறுமுகம், யோகம்மா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், புஸ்பறோஜினி, சகீலறோஜினி, லலிதரஞ்சினி காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், இரவீந்திரா, உதயகுமார், ஐங்கரமூர்த்தி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீனாட்சி அம்மன் கோவிலடி,**
**சாங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cr.44616) (N-1)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 30 . 01 . 1962

மறைவு 19 . 02 . 2025

## சின்னத்தம்பி விசுவாசம்

புழுதியிலே தான் புரண்டு போயிற்றே நேற்று
புனிதமது புயல்தீண்ட புதைந்திற்றே பேசாமல் ஏற்று
கூவிநின்ற குயிலொன்று குரல்மங்கி கலைந்திற்றே இங்கு
காற்றொன்று திசைமறந்து காணாமல் போயிற்றே விரைந்து
கனகமணி பேச்சிழக்க கற்பூரம் ஒளியிழக்க வாசல்,
கதியிழந்து போயிற்று, கதைமுடிய லாயிற்று.
நெஞ்சு கனக்கிறதே நினைவுகளும் சுடுகிறதே எங்கள்,
நித்திய சுவாசத்தை நீசக்காலன் பறித்தானே இங்கு.
சத்தியத்தின் வடிவை செந்தமிழின் பொலிவைப் பிரிந்து,
ஆளுமையின் எல்லையினை ஆன்றோனாய் தொட்டு நின்று,
வாழும் வரையுந்தன் வற்றாத பணிசெய்து ஓய்ந்தாய்.
நீளும் எம் வாழ்வில் நின்நினைவுகளும் நிலைத்திருக்கும் மறவோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (21.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

**நீர்வேலி மத்தி,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்.**

(cs 57777) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/01
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in GROUP A in Table below) and Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in GROUP B in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-03-21 To 2025-04-07 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-03-21 To 2025-04-07 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-03-28 |
| | Closing and Opening of Bids | At 2.00 P.M on 2025-04-08 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group A | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/01/2025/01 | Package 01 * Construction of Nagathampitan veethy- Urelu | 11.45 | 84 | C6 or above (Highway) | 5,000.00 | 115,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| Group B | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/01/2025/02 | Package 02 * Construction of Kalaioli veethy 1st lane (masivan joint road) Siruppiddy *Reconstruction of kanthavalavu veethy Avarangal | 9.31 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 94,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/03 | Package 03 * Construction of Ganavairavar joint veethy - Urumpirai * Construction of Sivakula veethy by lane - Urumpirai * Construction of Kadduvairavar kovil veethy - Urumpirai *Reconstruction Kali kovil veethy - Neervely ( R.C School veethy) | 8.26 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 83,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/04 | Package 04 *Construction of Irathampu veethy - Kopay *Construction of Dutch Road by lane - Kopay (Timber shop near road) * Construction of Poyiddy vinobaji veethy 3rd connecting road | 9.48 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 95,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/05 | Package 05 * Reconstruction of Fatima lane - Atchuvely * Construction of Periyapokkanai by lanes - Watharawaththai | 8.44 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 85,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/06 | Package 06 * Construction of Yogapuram Road 1st ,2nd, 3rd by lane- Urumpirai * Construction of Vairavar kovil veethy (Bank veethy near road) - Puttur | 9.01 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 92,000.00 | 22.07.2025 | 24.06.2025 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur .

21/03/2025

CR/4(20)/3-1

# பிரபாகரனைத் தேடியது போன்றே தென்னக்கோனையும் தேடினோம்!

## மேலதிக சொலிசிட்டர் ஜெனெரல் திலீபா பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைதுசெய்வதற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கை போன்ற ஒன்றில் பொலிஸார் ஈடுபட்டனர் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் நீதிமன்றத்தின் ஆஜராகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனெரல் திலீபா பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கைதுசெய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் இவரை கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் பெரும் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர். பிரபாகரனைத் தேடுவது போல இவரைத் தேடித் திரிந்தோம். ஆனால் இவர், நேற்றுவரை தனது சமூக, மதச் செல்வாக்கைப் பாவித்து கைதுசெய்யப்படுவதைத் தவிர்த்து வந்தார்.

இவர் தனது முகவரியாக வழங்கியுள்ள வீட்டில் உண்மையில் பௌத்த மதகுரு ஒருவரே வசிக்கின்றார். கடந்த சில நாள்களாக பொலிஸார் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் ஏனையவர்களிடம் இவர் எங்கிருக்கின்றார் என விசாரணை செய்தனர். செல்வாக்குள்ளவர்களுடன் இவர் உடன்பாடுகளை செய்துகொண்டுள்ளார்.

இவரது வீட்டைச் சோதனையிட்டவேளை 795 மதுபானப் போத்தல்களும், . 100க்கும் மேற்பட்ட ஆடம்பர பரிசுக் கூடைகளும் காணப்பட்டன. அரசாங்க ஊழியர்கள் சிறிய பரிசுப் பொதியை கூட பெறமுடியாது. இவ்வாறிருக்கையில், இவரால் எப்படி இவற்றைப் பெறமுடிந்தது? அவரது வீடு ஒரு வடிசாராயத் தொழிற்சாலை. அவரது பெயரின் கீழ் எந்தச் சொத்துக்களும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அவருக்கு எட்டு வீடுகள் உள்ளன. இதன் காரணமாகவே இவர் திட்டமிட்ட குற்றச்செயல் களில் ஈடுபடுபவர்களை விட ஆபத்தானவர் என தெரிவிக்கின்றேன். உண்மையில் இவர் ஒரு பிசாசு - என்றார். (அ-ம-இ)

*சிறார்களின் உளப்பிரச்சினையை*

# கண்டறியக்கூடிய கருவி; பிரான்ஸில் தமிழர் சாதனை

பரிஸ் ,மார்ச்.21

பிரான்ஸில் சிறார்களுக்கு ஏற்படுகின்ற மனஇறுக்க உளப் பாதிப்புகளை உடனடியாகவே கைபேசி வழியாக எச்சரிக்கும் திறன் கொண்ட கருவியை உருவாக்கி ஈழத்தைச் சேர்ந்த சுஜீவன் முருகானந்தம் என்பவர் சாதனையீட்டியுள்ளார்.

பிரான்ஸில் இடம்பெற்ற துறைசார் கருவி உருவாக்குநர்களுக்கான தேர்வில், சுஜீவன் முருகானந்தம் உருவாக்கிய கருவி மக்களின் விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. எட்டியுள்ளது. இளம் சிறார்களின் அகமன நிலையை உணர்ந்தறியும் தொழில்நுட்பத்தைக் கொண்டதாக இந்தக் கருவி உருவாக்கப்பட்டுள்ளது. (ச-22)

*ஏப்ரல் மாதம் முதல்*

# பால் தேநீர் விலை கூடும்

கொழும்பு, மார்ச் 21

பால்மாவின் விலை அதிகரிப்பதால் பால் தேநீரின் விலை அதிகரிக்கப்படும் என்று இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்தே, பால்மாவின் விலை அதிகரித்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிமுதல் பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னணி....

இடங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நல்லூர்ப் பிரதேச சபை மற்றும் பருத்தித்துறைப் பிரதேசசபை ஆகியவற்றிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மான்...

வண்ணன் தரப்பினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்ய தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளினதும், ஞானப்பிரகாசம் சுலக்சன், நரேந்திரன் கௌசல்யா ஆகிய சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## யாழ்ப்பாணம்...

களும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 23 வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் 35 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள் ளன. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் 22 வேட்புமனுக்கள் அரசியற்கட்சிகளுடையவை. 13 வேட்புமனுக்கள் சுயேச்சைக் குழுக்களுடையவை. 124 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களில் 114 வேட்புமனுக்கள் அரசியற் கட்சிகளுடையவை. 10 வேட்புமனுக்கள் சுயேச்சைக் குழுக்களு டையவை - என்றார். (அ-ம-26-125)


## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு B+ குருதி வகையை உடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது. சிறுநீரகம் தானம் செய்ய விரும்புபவர்கள் கீழ் உள்ள இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 893 9807


## நிராகரிப்புக்கு...

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட மை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிறேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு பல இடங்களில் நிராகரிக்கப்பட் டுள்ளது. எங்களின் வேட்புமனுக்களை மட்டுமல்ல இன்னும் பல கட்சிகளின் வேட்புமனுக்களையும், சுயேச்சைக்குழுக்களின் வேட்புமனுக்களையும் நிராகித்துள்ளனர்.

இந்த நிராகரிப்புக்கு அவர்கள் சொல்லும் காரணம் எல்லாம் ஒரேமாதிரியாகத் தான் உள்ளது. அற்ப காரணங்களுக்காக வேட்புமனுக்களை நிராகரித்துள்ளனர். பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுக் களை முன்வைத்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பதிவாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியைத்தான் நாம் உறுதிப்படுத்திக் கொடுக்கின்றோம். ஆனால், அதை நிராகரித்துள்ளனர். நாங்கள் தேவையான அளவுக்கு முறைப்படி பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியுள்ளோம். ஆகவே, மிக இலகுவாக அவர்கள் எமது வேட்புமனுக்களை உறுதிப்படுத்தியிருக்கவும் ஏற்றுக்கொள்ளவும் முடியும். அத்துடன் அனைத்துப் பிரதிகளையும் சமாதான நீதவான்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே, எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறானதும் முறையற்றதுமான நடவடிக்கை என்பது உறுதியாகின்றது. எனவே நாங்கள் மிக விரைவில் நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என்றார். (அ-ம-125)

## தேசிய...

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்களை தான் தோன்றித் தனமாக நிராகரித்துவிட்டு, தேசிய மக்கள் சக்தியை உள்ளூராட்சிகளிலும் ஆட்சியில் ஏற்றுவதற்குச் சதிநடவடிக்கை இடம்பெறுகின்றதா? என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்கு) ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் எமது வேட்புமனுக்கள் உட்பட அனேக தரப்புக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கிளிநொச்சி, முல்லைத்தீவு என பல இடங்களில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எமது வேட்புமனுக்களை நிராகரித்துவிட்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சியில் ஏற்ற சதிகள் இடம்பெறுகின்றனவா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ-ம-125)


# INVITATION FOR BID 2025/02
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..

   Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Docuement
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-03-21 To 2025-04-07 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-03-21 To 2025-04-07 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-03-28 |
| | Closing and Opening of Bids | At 01.30 P.M on 2025-04-08 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025/LAR/01 | Construction of Sanga Veethy at Urelu | 10.17 | 84 | C6 or above (Highway) | 4,000.00 | 108,000.00 | 22.07.2025 | 24.06.2025 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha,
Puttur .

21/03/2025

(CR/4463) ஜ-


# கூட்டமைப்பின் நோக்கம்தான் எமது கூட்டணியின் இலக்கும்!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அத்தகை செயற்பாட்டிற்கானதே எமது கூட்டணி என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற புதிய கூட்டணி தொடர்பான ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கூட்டணியாக ஒன்றிணைவது மன ஆறுதலையும், நம்பிக்கையும் கொடுக்கின்றது. 2009ஆம் ஆண்டுமே மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக ஒன்றாகச் செயற்பட்ட காலத்தில் பலகுழப்பங்கள் ஏற்பட்டன. பல கொள்கை ரீதியான பிரச்சினைகள் உருவான நிலையில் அது கட்டம் கட்டமாக விரிந்து 2010 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வெளியேறியிருந்தது. எந்தக் கொள்கைக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ, அந்தக் கொள்கையில் இருந்து கூட்டமைப்பு விலகியதன் காரணமாகவே நாங்கள் வெளியேறியிருந்தோம். நாங்கள் இதனை மக்களுக்கு காலம்காலமாகத் தெளிவுபடுத்தியிருந்தோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எத்தகைய கொள்கைக்காக உருவாக்கப்பட்டதோ அத்தகைய கொள்கைக்காக மீண்டும் உறுதியாகப் பயணிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இன்று கொள்கையோடு உறுதியாகப் பயணிக்கக்கூடிய தரப்புகளை உள்வாங்கி கூட்டணியை அமைத்துள்ளோம்.

2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிற்பாடு நேர்மையான பலமான கொள்கை ரீதியாக உறுதியாகப் பயணிக்கின்ற கூட்டு முயற்சி அவசியம். இதனை விளங்கிக்கொண்டு தேர்தல் முடிந்த கையோடு நாங்கள் ஒருசில முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

அதன் விளைவாகவே இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித்...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பும னுத் தாக்கல் நேற்று நண்பகலுடன் நிறைவுக்கு வந்த நிலையிலேயே, தேர் தல்திகதி தொடர்பான அறிவிப்பை தேசிய தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ளது.

பாதீடு மீது இன்று இறுதி வாக்கெடுப்பு முடிந்த பின்னர், நாளை முதல் பரப்புரை நடவடிக்கையில் பிரதான அரசியற்கட்சி கள் களமிறங்கவுள்ளன. ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்ப வற்றில் வெற்றிநடைபோட்ட தேசிய மக் கள் சக்தி, உள்ளூராட்சித் தேர்தலிலும் சகல சபைகளிலும் ஆட்சியமைக்க முனைப்புக்காட்டிவருகின்றது.

எனினும், பொருள்கள் மீதான விலைக் குறைப்பு உள்ளிட்ட விடயங்களில் தேர் தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதி களை தேசிய மக்கள் சக்தி நிறைவேற்ற வில்லை என மக்கள் மத்தியில் அதிருப்தி உள்ளது. அதேபோல ஊழல்வாதிக ளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக் கப்படவில்லை எனவும், வெளிநாட்டில் பதுக்கப்பட்டதாகக் கூறப்படும் பணம் உள்ளிட்ட விடயங்களில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

அதேபோல பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், அரசியற்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் முறையாகச் செயற்படவில்லை எனவும், எனவே, தமிழர் தாயகத்தில் இம்முறை வெல்லமுடியாது எனவும் தமிழ்க் கட்சிகள் குறிப்பிடுகின் றன.

வாக்கு வங்கி சரிந்தால் அது எதிரணிக்கு அரசியல் அஸ்திரமாக அமையக்கூடும் என்பதால் இத்தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டுவதற்கு அநுர அரசு முழுவீச்சுடன் செயற்படும். அதேபோல தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு எதிரணிகளும் போராடும் என்று நம்பப் படுகின்றது. (அ-ம-44)

## மன்னார்...

மன்னார் மாவட்டத்தில்- மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேசசபைகள் உள்ளடங்க லாக நான்கு உள்ளூராட்சி மன்றங்க ளுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டி ருந்தன.

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுயேச் சைக் குழுக்கள் மற்றும் அரசியற்கட்சி கள் உள்ளடங்கலாக 45 தரப்புகள் கட் டுப்பணத்தைச் செலுத்தியிருந்தன. அவற்றில் 38 தரப்புகளே வேட்புமனுக் களைத் தாக்கல்செய்தன. இதன்படி, மன்னார் நகரசபையில் 9 கட்சிகளும் ஒரு சுயேச்சைக்குழுவும் உள்ளடங்கலாக 10 வேட்புமனுக்கள் கிடைத்தன. முசலி பிரதேசசபைக்கு 9 கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழு உள்ளடங்கலாக 10 வேட்பு மனுக்கள் கிடைத்தன.

நானாட்டான் பிரதேச சபைக்கு 7 கட்சி களும் ஒரு சுயேச்சைக்குழுவும் உள்ளடங் கலாக 8 வேட்பு மனுக்கள் கிடைத்தன. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 9 கட்சிகள் ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங் கலாக 10 வேட்புமனுக்கள் கிடைத்தன.

முசலி பிரதேசசபைக்கு கிடைத்த 10 வேட் புமனுக்களில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்புமனு நிராகரிக்கப் பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேசசபைக்குக் கிடைத்த 8 வேட்புமனுக்களும் முழுமையாக ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மாந்தை மேற்குப் பிரதேசசபைக்குக் கிடைத்த 10 வேட்புமனுக்களில் இலங் கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறீலங்கா தொழிலாளர் கட்சி, சர்வஜன அதிகாரம் ஆகிய நான்கு கட்சிகளும் சுயேச்சைக் குழு ஒன்று உள்ளடங்கலாக 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகரசபைக்கு கிடைத்த 10 வேட் புமனுக்களில் பொதுஜன ஐக்கிய முன் னணி மற்றும் சுயேச்சைக்குழு உள்ள டங்கலாக 2 வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன. குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தனும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-56-125)

## கட்டாணை...

ஒன்று வழங்கும்படி கோரி நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் மருத்துவர் எஸ்.சிவமோகன் தாக்கல்செய்த மனுவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

எனினும், கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக சிவ மோகன் தாக்கல்செய்த மூல வழக்கு தொடர்ந்தும் விசாரணையில் இருக்கும். கட்டாணை விதிக்கும் கோரிக்கையே தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முதல் மூன்று எதிராளி களான கட்சியின் பதில் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் இதுவரை காலமும் செய லாளராகக் கடமையாற்றிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் எம்.பி., கட்சியின் நிர் வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்த ரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டிருந்தார்.

நான்காவது எதிராளியாக இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த சி.சிறிதரன் எம்.பி. வழக்காளியான மருத்துவர் சிவமோக னுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்து பதில் மனுத்தாக்கல் செய்திருந்தார். வழக்காளி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகி யிருந்தார்.

இடைக்காலக் கட்டளை மீதான விசா ரணை ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம26-100)

## சுனில்...

உயர்நீதிமன்றம் நேற்று பயணத்தடை விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட் டுத் தமிழர்களைப் படுகொலை செய்த குற்றத்துக்காக சுனித் ரத்நாயக்கவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், முன்னாள் ஜனாதிபதி கோத் தாபய ராஜபக்ச அவரைப் பொதுமன் னிப்பின் கீழ் விடுவித்தார்.

ஆனால், அவருக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு சட்டவிரோதமானது என்று மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுக்களின் மீதான விசாரணைகளின் அடிப்படையிலேயே அவருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-மஇ)

## 103 உறுப்பினரின்...

மாவட்டச் செயலரும், தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலருமான பி.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

**வவுனியா நகரசபை**

இதுவரை நகரசபையாக இருந்து தரமு யர்த்தப்பட்ட வவுனியா மாநகரசபைக்கான முதலாவது தேர்தலாக இது அமைந்துள் ளது. இம்முறை மாநகரசபைக்கு மொத் தமாக 20 உறுப்பினர்கள் தெரிவுசெய் யப்படவுள்ளனர். அதற்காக 10 அரசியற் கட்சிகளும் 2 சுயேச்சைக்குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்திருந் தன. அவற்றில் மக்கள் போராட்ட முன் னணியின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்ப் பிரதேச சபை**

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு 26 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்காக 12 அரசியற்கட்சிகளும், 4 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக் கல் செய்திருந்தன. அவற்றில் ஜனநாய கத் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்புமனுக்கள்நிராகரிக்கப்பட்டுள்ளன. 13 தரப்புகளின் விண்ணப்பங்கள் ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**செட்டிகுளம் பிரதேச சபை**

வெண்கல செட்டிகுளம் பிரதேசசபைக்கு 18 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வுள்ளனர். அதற்காக 10 அரசியற்கட்சி களும், 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தி ருந்த நிலையில் விண்ணப்பித்த 12 தரப்புகளின் வேட்புமனுக்களும் ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**வடக்குப் பிரதேச சபை**

வவுனியா வடக்குப் பிரதேசசபையில் 23 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ள னர். அதற்காக 9 அரசியற் கட்சிகளும் 2 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக் களை தாக்கல்செய்திருந்தன. அவற் றில், இரண்டு சுயேச்சைகளின் குழு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள் ளன. 9 தரப்புகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**சிங்களப் பிரதேசசபை**

வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை யில் 16 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளனர். அதற்காக 7 அரசியற் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல்செய்திருந்த நிலையில் அவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஆயிரத்து 231 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 71 தரப்புகள் கட்டுப் பணத்தைச் செலுத்தியிருந்தன. அவற் றில் 11 தரப்புகள் வேட்புமனுக்களை கையளித்திருக்கவில்லை. வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 29 ஆயி ரத்து 293 வாக்காளர்கள் வாக்களிப்ப தற்கு தகுதிபெற்றுள்ளனர்-என்றார். (அ-ம-110)

## ஏழு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரைச்சிப் பிரதேசசபைக்காக 10 கட்சிக ளும் 3 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுவைத் தாக்கல்செய்திருந்தன. 3 கட்சிகள் மற்றும் 2 சுயேச்சைக் குழுக்க ளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட் டுள்ளன. இதனால், கரைச்சிப் பிரதேச சபைக்கான தேர்தலில் 7 கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடவுள் ளன. சுயேச்சைக் குழு மாட்டுவண்டில் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 7 கட்சி களும் 2 சுயேச்சைக்குழுக்களும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த நிலையில் ஒரு சுயேச்சைக் குழு நிராகரிக்கப்பட்டுள் ளது. மற்றைய சுயேச்சைக் குழு ஊசி சின்னத்தில் போட்டியிடவுள்ளது. நீதி மன்ற வழக்குகளுக்காகத் தாமதமான பூநகரி பிரதேச சபைக்கான கட்டுப்ப ணத்தை எதிர்வரும் 26ஆம் திகதி நண் பகல் 12 மணிவரை செலுத்த முடியும். பூநகரி பிரதேச சபைக்கான தேர்தல் வேட்புமனுக்கள் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்-என்றார். (அ-ம-125-113)

## நான்கு...

குழுக்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சசிகுமார் சிந்துஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியி ருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசசபை களில் போட்டியிடுவதற்காக 38 வேட்பும னுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் கரைதுறைப்பற்று பிர தேசசபையில் சிறீலங்கா மகாஜன பட் சய, மக்கள் முன்னணி ஆகியவற்றின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. புதுக்குடியிருப்பில் 2 சுயேச்சைக் குழுக் களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## தாமதித்து...

வவுனியா வடக்குப் பிரதேசசபையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக அறி விக்கப்பட்டிருந்த நிலையில், சில மணித் தியாலங்களின் பின்னர் வேட்புமனு ஏற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் வேட்புமனு எதற்காக நிராகரிக் கப்பட்டது என்று கூட்டணியின் அதிகார மளிக்கப்பட்ட முகவரான செ.மயூரன் விளக்கம் கோரியிருந்தார். இதைய டுத்து சிறிது நேரத்தால் அந்த வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என் றும், தொழில்நுட்பக் கோளாறு காரண மாகவே வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தவறுதலாக அறிவிக்கப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-ம-110)

## சங்கு...

இதன்படி, யாழ்ப்பாணம் மாநகரசபை, சாவகச்சேரி நகரசபை, காரைநகர் பிர தேசசபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேசசபை, வலி. கிழக்கு பிரதேசசபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, நல்லூர் பிரதேச சபை, வலி.கிழக்கு பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பும னுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள் ளன. (அ-ம-26)

## பட்ஜெட்...

முன்வைக்கப்பட்டது. அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீடு தொடர் பான விவாதம் இன்றுவரை முன்னெடுக் கப்பட்டுவருகின்றது. இதைத் தொடர்ந்தே இன்று மாலை பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. (அ-ம-26)

noolaham.org | aavanaham.org

# ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஐ.எம்.எப். தடையில்லை!

**அறை வாடகைக்குத் தேவை**

யாழ் வைத்திய சாலையில் பணியாற்றும் பெண் வைத்தியருக்கு பாதுகாப்புடன் கூடிய அறை 6 மாதங்களுக்கு வாடகைக்குத் தேவை. வைத்திய சாலையில் இருந்து நடை தூரத்தில் விரும்பத்தக்கது.

**077 078 4411, 075 078 4466**

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து **40m** தொலைவில் HNB வங்கிக்கும் **Sunway Supermarket** க்கும் மிக அருகில்

- **வெட்டுக்கிணறு**
- **சுற்றுமதிலுடன் கூடிய**
- **ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

**077 774 2681, 077 690 1708**

(CS/29898) J-1

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- **0044 740 537 3526**

(CS/57780) J-1

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நாணயநிதியம் எந்தவகையிலும் கட்டுப்பாடு விதிக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரச சேவையில் உள்ள 15 ஆயிரத்து 921 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி அமைச்சின் முகாமைத்துவத் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. அரச சேவையில் ஆட்சேர்ப்புநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படக்கூடாதென்றும் சர்வதேச நாணயநிதியம் நிபந்தனை விதித்துள்ளது என்பதும் ரணில் விக்கிரமசிங்கவின் கற்ப



னைக் கதையாகும். அவ்வாறு எந்தவொரு நிபந்தனையும் விதிக்கப்படவில்லை.

அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. அரச செலவுகளைக் குறைத்து, அரச நிதியை முகாமைத்து வம் செய்யவேண்டும் என்பதே நாணய நிதியத்தின் நிபந்தனையாகும்.

நியமனங்களை வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. அதே போன்று பட்டதாரிகளுக்கும் போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டு அவர்களுக்கும் உரிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்-என்றார். (எ-இ)

## திருவள்ளுவர் குருபூஜை

பளை, மார்ச் 21

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், திருவள்ளுவர் குருபூஜை, பளை முல்லையடி மஹாகாளி சங்கரநாராயணன் கோவில் மண்டபத்தில் இன்று மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திரு மதி ச.குணஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பங்கேற்கவுள்ளார்.

சிறப்புச் சொற்பொழிவை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சி.கா. கமலநாதன் நிகழ்த்தவுள்ளார். (ச-25,9)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



கடந்த 01.04.2024 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**சண்முகம் விஜயலட்சுமி**

திதி : சப்தமி (21.03.2025)

அம்மா...!

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அம்மா!
உங்கள் பாசமான முகம்பார்த்து ஓராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து
– நிற்கின்றோம்
உங்கள் நிழல் எங்கள் கூடவே வருவதுபோல
உங்கள் புன்னகை பூத்தமுகம் எங்கள் நினைவில்
– என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மனறக்காட்டு
முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

தோற்றம் 17.12.1948 மறைவு 01.04.2024

மணற்காடு, காரைநகர்.

உங்கள் பிரிவால் துயருறும் பாசமுள்ள பிள்ளைகள்.

(CS/57768) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.